# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**13295**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு K.பழனி,<br>442A, MIG பிளாட்,<br>முதல் மெயின் ரோடு,<br>மாத்தூர் – MMDA.<br>சென்னை – 600 068. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>பள்ளிக் கல்வி இயக்குநரகம்,<br>கல்லூரிச் சாலை,<br>சென்னை – 600 006. |

*****

மனுதாரா் திரு K.பழனி மற்றும் பொதுத் தகவல் அலுவலா் திரு D.ராஜேந்திரன், இணை இயக்குநா், பள்ளிக் கல்வி இயக்குநரகம், கல்லூரிச் சாலை, சென்னை மற்றும் திரு R.ஆறுமுகம், மாவட்டக் கல்வி அலுவலா் (சென்ட்ரல்), சென்னை இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனா்.

மனுதாரா் 15.04.2009 அன்று பொதுத் தகவல் அலுவலா், பள்ளிக் கல்வித் துறை, சென்னை அவா்களிடம் 11 இனங்களில் தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளாா். மனுதாரருடைய மனு 28.04.2008 அன்று மாவட்டக் கல்வி அலுவலருக்குத் தகவல் வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. 20.03.2009 அன்று மனுதாரா் கேட்ட தகவல்களை அளிக்கும்படி

ஆணையம் ஆணையிட்டுள்ளது. 05.06.2009 அன்று மனுதாரருக்குத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. தகவல்கள் முழுமையாக இல்லையென்று 10.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (22.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் கேட்ட 11 இனங்களும் ஒன்றன் பின் ஒன்றாக விசாரிக்கப்பட்டன. சில கேள்விகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் தெளிவாக இல்லையென்று ஆணையம் கருதுகிறது. இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் கேட்ட 1,5,7 இனங்களுக்கு உரிய தகவல்கள் மற்றும் 8,10 இனங்களுக்கு உரிய ஆணைகளின் நகல்களை இவ்வாணை பெறப்பட்ட 10 நாட்களுக்குள் மனுதாரருக்கு அனுப்பி, ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.13295/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
பள்ளிக் கல்வி இயக்குநரகம்,
கல்லூரிச் சாலை,
சென்னை – **600 006.**

திரு K.பழனி,
442A, MIG பிளாட்,
முதல் மெயின் ரோடு,
மாத்தூர் – MMDA.
சென்னை – **600 068.**

*"ptl"*